**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 7th JULY, 1981 No. 32

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

*JDCSI*

## Ordained to the Diaconate

***Mr. J. K. Mather,*** Worker at Anaicottai and ***Mr. Nesakumar Kadirgamar,*** Worker at Erlalai North, were ordained to the Diaconate of the Jaffna Diocese on Saturday, 1st of August at 7.30 a. m. by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar at the Cathedral Church, Vaddukoddai.

The Rev. J. J. Ratnarajah was the preacher at the Service. He chose as his text, Exoduse 17 (8) — "*And Moses said unto Joshua, choose us out men, and go out fight with Amalek, tomorrow. I will stand on the top of the hill with the rod of God in my hand*".

Rev. Ratnarajah said that it was customary on occasions like this in years gone by, for two "charges" to be given, one for the candidate and the other for the Church. Though the practice exists no more, the tradition underscores an important truth.

The Church and the Minister are engaged in 'a struggle'. In this struggle the Minister of the Church has to stand on "higher ground" if his Ministry is to be successful. The image the Minister of the Church projects and his spiritual stature will determine largely the success of the Chnrch's Mission.

As a Diocese, these are days when we are thinking increasingly of our future. The character of our Ministry will be judged in future not merely by our ability to find men to serve our local needs but also men who will go out and lead the 'fight' in new frontiers.

Rev. D. R. Ambalavanar led the Litany.

The Bishop was the Celebrant at the Holy Communion Service at which he was assited by Rev. S. Sugunanandan, Rev. N. W. G. Sugunarajah, Rev. Sam Thampoe and Rev. D. R. Ambalavanar.

A Fellowship Breakfast followed where all those who attended the Ordination Service were hosted by Rev. J. K. Mather and Rev. Nesakumar Kadirgamar.

## Christians in Nepal

It is reported that about fifty Christians have been arrested during the last few months in Nepal in the southern slope of the Himalayas, situated between India and China.

Two brothers both high school students who wanted to give their mother a christian burial were taken into custody.

Following a recent referendum it is reported that a memo has been sent out by the government calling for a clamp-down on christians and muslims.

*NCC*

## Resolution Forwarded to His Excellency the President of Sri Lanka

The Annual General Meeting of the National Christian Council of Sri Lanka held on 18 July 1981 empowered its Executive Committee to consider the incidents in Jaffna during the week beginning 31 May 1981 and events leading up to them, with a view to submitting a Memorandum to His Excellency J. R. Jayawardene, Executive President of the Democratic Socialist Republic of Sri Lanka.

The Executive Committee of of the National Christian Council of Sri Lanka met at an Emergency Meeting on 24 July 1981 and unanimously resolved to request His Excellency J. R. Jayawardene, Executive President of the Democratic Socialist Republic of Sri Lanka, as follows:—

(i) A Commission of Inquiry should be appointed to investigate the recent acts of lawlessness, violence, terrorism, arson and looting in Jaffna specifically covering the period 31 May 1981 to 6 June 1981, and the events leading up to them.

(ii) Both the compositon and terms of reference of the said Commissions hould be agreeable to all recognised political parties in the country.

(iii) Permission should be granted to members of Amnesty International to be present at the sittings of the said Commission as Observers.

(iv) The said Commission shoud be directed to complete its sittings within a period not exceeding six months and the Report including the Findings and Recommendations of the said Commission should be made available to the public within one month of its completion.

(v) All those responsible for acts of lawlessness, violence, terrorism, arson and looting should be dealt with after fair trial by normal legal process.

(vi) All victims who have suffered loss of property or personal injury and the dependents of those who were killed should be duly compensated early.

(vii) Since the destruction of the Jaffna Public Library is a great national loss, a Fund should be established for the speedy rebuilding and re-stocking of the Library.

(viii) All responsible for the acts of lawlessness or interference with the democratic process of elections should be dealt with after fair inquiry.

(ix) Measures should be instituted immediately to restore the confidence of all the people in our country in the ability of the Government to maintain law and order.

(x) A permanent Institution should be established for the maintenance of peace, security and racial harmony and for implementing the recommendations of the said Commission of Inquiry.

The Executive Committee of the National Christian Council of Sri Lanka, further requests His Excellency the Executive President of the Democratic Socialist Republic of Sri Lanka, to invite an International Institution like International Commission of Jurists to investigate the incidence and causes of racial tension in our Country and make suitable recommendations.

**The Rev. S. K. Perera** Chairman, NCC. **Col. P. W. Perera** Vice-Chairman, NCC. **The Rev. S. S. Arulampalam** Vice-Chairman, NCC.

**S. H. Abeywardene** Hony. Treasurer, NCC. **Shirley J. S. Peiris** Gen. Secretary, NCC.

## Orientation Course at Medical College

Dr. Dennis J. Aloysius, addressing the first batch of recruits to the Private North Colombo Medical College, said that before attempting to treat human beings, it is necessary that medical students should acquaint themselves with the study of man's ancestry.

As important to a Doctor as the study of Physiology or anatomy is the study of how man evolved from the stone age to the present atomic age.

The Sumarians had this inscription written down in a tablet:- "Here man, his days numbered, whatever he may do is but wind".

If as the Sumarians did we realise that man, whatever his race, creed or nationality arose from one stream and is but a mere "wind" in this planet, living for around 70 years then we will begin to treat our brother as a fellow human being.

When a student of NCMC gets this clear in his mind, it is then that he can go out of its portals as a good and distinctive doctor.

## The Colombo Municipal Council

The Colombo Municipal Council at its meeting on Monday 27-7-81 has decided that members should volunteer contributions from their allowances to re-build the Jaffna Public Library. The Motion was moved by Mr. D. W. Abeyakoon, an SLFP member of the Colombo Municipal Council.

## The Ceylon Bible Society Annual Essay Competition

For young people

Ages between 10 — 14 and 15 — 18 years

Please apply for particulars immediately.

THE BIBLE HOUSE,
293, Galle Road,
Colombo 3.

*Methodist Church*

## Golden Jubilee Celebrations

The Golden Jubilee Celebrations of Kollupitiya Methodist Government Tamil Mixed School had as, a novel feature, a special programme for *fifty days.*

The school in Hudson Road, Kollupitiya was founded by Rev. (Dr.) James S. Mather in 1930 with funds collected from his friends and supporters.

There was a Public Meeting on the climactic day (6-8-81) in the school hall. The Hon. Mr. Thondaman, presided. A Bust of the Founder was unveiled by the Chairman, Minister Thondaman.

The present Principal of the school is Mr. P. Nallaratnam who in his report acknowledged with gratitude the assistance that has always been extended to the school by the Methodist Church, Kollupitiya.

## Bill provides for Aborigines

The *Pitjantjatjara* Land Rights Bill passed in the South Australian Parliament provides for Aboriginals in the State to own one-tenth of the State — an area as big as Tasmania.

The Bill has attracted a good deal of interest and has been commended as a model within Australia for reaching agreement between indigenous people and governments.

## China's Population Problem

China's population is believed to be in the region of *one billion*. Over 65 per cent of the population is under 30 which means even if the government's economic incentives to limit families to one child, are successful, the population will continue to increase in significant numbers for the rest of the century.

*IN BRIEF*

- O *Agency Post Office Work*: Six private concerns in the city has been allowed to handle agency post office work from 15-7-81
- O *Private ccaches* around 7000 private coaches have been registered with the R M V but only 3000 with the Ministry of private Omnibus Transport.

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "


தாரகை ஒளி

இருள் மேலும் வீறுகொண்டு போகிறதென்றால் விடிவு சமீபம் என்பது பொருள். — யாரோ


மலர் 141 ] 7 — 8 — 1981 [ இதழ் 32


## சாத்வீகத்தின் வல்லமை

**கத்தியின்றி ரத்தமின்றிப் போரில் மா வெற்றி கண்ட காந்தி மகான் பாட்டு வேண்டுமா ?**

**சத்தியமே ஜெயந்தருமென்றே சாற்றுகின்ற ஜவகர்லால் பாட்டு வேண்டுமா ?**

இந்தியா சுதந்திரமடைந்த காலத்தில் மிகப் பிரபல்யமாக விருந்த பாடல் இது. இதனை இசைமேதை டி, ஆர். மகாலிங்கம் பாடினார். இதனைக் கேட்கும் பொழுது உணர்ச்சியடையாத தேச பக்தர்கள் இருக்கமாட்டார்கள்.

"சத்தியமே ஜெயம்" என்ற கோட்பாட்டில் பெருநம்பிக்கை கொண்டுள்ளது நமது சமூதாயம். சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் பேரரசை வெற்றி கண்டது காந்தி அடிகளாரின் சாத்வீகப் போராட்டம். இதனாலேதான் நமது சமுதாயம் என்றும் வன்முறையை எதிர்த்து வந்தது. "உன் பட்டயத்தை உறையினுளே போடு, பட்டயத்தை எடுத்தவர்கள் பட்டயத்தினாலேயே இறநது படுவர்" என்று கூறினார் இயேசு கிறிஸ்து. அன்பினால் கட்டப்படாததெதுவும் நிலை நிற்கமாட்டாது என்பதனை நாம் அனுபவவாயிலாகக் கண்டிருக்கிறோம். இந்தியாவை வஞ்சித்து உருவாக்கிய பாகிஸ்தான் உடைந்து நொருங்கியது வரலாறு காட்டும் உண்மை.

இன்று தமிழ்ச்சமுதாயம் பிரச்சினையின் விளிம்பில் வந்து நிற்கிறது. வன்முறை, கொலை, துப்பாக்கிப்பிரயோகம் சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகளாகிவிட்டன. வடமாகாணம் "பியாபிராவா" வட அயர்லாந்தா, வங்காள தேசமா என்று பலர் ஆராய முற்பட்டிருக்கின்றனர். முடிவு எப்படியாக இருந்தாலும் நமது கைகள் எப்பொழுதும் சுத்தமாகவிருப்பது விரும்பத்தக்கது. மற்றவனின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதே சாத்வீகத்தின் நோக்கமாகும். இன்று நாட்டில் வன்முறைகள் பலவிடங்களிலும் தலைதூக்கியுள்ளபோதும் பெருந்தொகையான சிங்கள மக்கள் அதனை எதிர்த்துப் பிரசாரம் செய்து வருகின்றனர் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத பெரிய உண்மையாகும். சாதவீக போராட்டத்தின் மூலமாக மற்றவர்களின் உள்ளத்தைத் தொடமுடியும். சாத்வீகப் போராட்டம் வன்முறையை விட்டொழிந்த போராட்டம் என்று மட்டும் கருதிவிடலாகாது பிறருக்கு நமது மனதினுற் கூட தீங்கு நினையாமையே சாத்வீகம்.

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமையிலாத சொல் என்றார் வள்ளுவர்.**

நமது வாயினுற் கூட பிறரைப் பழித்தும் இழித்தும் கூறுவது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும். நமது கடமையை நாம் நேர்மையாகச் செய்து முடிப்போம் முடிவைக் கடவுளிடம் விட்டுவிடுவோம். ஏனெனில் அவரே சர்வ லோகத்தின் நியாயாதிபதியாகவிருக்கின்றார்.

## செய்திகள்

### வடக்கில் கடுங் காற்று

வடபகுதியில் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களும் பலத்த காற்று வீசியது.

இதனால் ஆங்காங்கே சிறுசிறு சேதங்கள் ஏற்பட்டன. பனைகள், வாழைகள் ஆகியன முறிந்து விழுந்தன.

### யாழ் பல்கலைக்கழகப் பரீட்சைகள்

யாழ் பல்கலைக்கழக மாணவரின் ஆண்டுப் பரீட்சை 24 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை நேற்று ஆரம்பமாகவிருந்த போதிலும் மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவரின் வேண்டுகோளையடுத்து ஒத்திவைக்கப்படவிருக்கின்றது.

கலை, விஞ்ஞான மாணவரின் பரீட்சையே ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. சங்கீதப் பரீட்சைகள் நடைபெறுகின்றன.

### மதமாற்றத்தைத் தடை செய்ய சட்டம்

கட்டாயப்படுத்தல், ஆசை காட்டல் ஆகியவை மூலம் மதம் மாற்றம் செய்வதைத் தடை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு தமிழக அரசு எண்ணியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசுடன் தமிழக அரசு தொடர்பு கொண்டுள்ளது.

தமிழக தகவல் மற்றும் அற நிலைய அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் இன்று திருச்சியில் இத் தகவலைத் தெரிவித்தார். கடந்த மாதம் பெருந்தொகையான இந்து தாழ்த்தப்பட்ட மக்கள், இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து கொண்டமையே இந்தச் சட்டத்திற்குக் காரணமாகும்.

### மாற்றம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்குச் சலுகை

அரசாங்க ஊழியர்கள் இடமாற்றம் பெறும் பொழுதும் தங்களது உடைமைகளை எடுத்து செல்ல தாம் கடமையாற்றும் திணைக்கள லொறிகளை பயன்படுத்தலாம் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது சம்பந்தமான சுற்றறிக்கையொன்றை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின், செயலாளர் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

## அருள் பற்றி பவுல்

— எஸ். ஜெபநேசன் —

"அருள்" தான் பவுலின் சித்தாந்தமாகிய விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பதன் அடிஅத்திவாரமாகும்.

இதனை அவர் உரோமருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவாகக் கூறுகின்றார்.

**அருளால் தேர்ந்தெடுக்கப்பட்டவராயின் செயல்களை முன்னிட்டுத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது பொருள்; செயல்களை முன்னிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அருள் அருளாகாது.**

உரோமர் 11 : 6.

**உலகத்தார் அனைவரும் பாவத்துள் வீழ்ந்தனர்**

புதிய ஏற்பாட்டில் அருள். பாவம் உலகத்து மக்கள் அனைவரையும் பீடித்துள்ளது என்ற அடிப்படையில் எழுகின்றது. பவுல் உலகம் முழுவதனையும் பாவம் பீடித்துள்ளதென்பதனை பழைய ஏற்பாட்டுச் சாட்சிகள் மூலம் நிரூபிக்கின்றார்.

அப்படியானால் மற்றவர்களைவிட யூதர்கள்தாம் மேலானவர்களா? இல்லவே இல்லை. ஏனெனில் யூதர், கிரேக்கர் யாவரும் பாவத்தின் பிடியிலுள்ளதாக ஏற்கெனவே எண்பித்தாயிற்று. அவ்வாறே மறை நூலிலும் எழுதியுள்ளது :

"இறைவனுக்கு ஏற்புடையவனே இல்லை, ஒருவன் கூட இல்லை. உணர்வுள்ளவன் ஒருவனுமில்லை. கடவுளைத் தேடுபவன் எவனுமில்லை, எல்லோரும் நெறி பிறழ்ந்தனர். ஒருங்கே கெட்டுப் போயினர். நன்மை செய்பவன் எவனுமில்லை, ஒருவன் கூட இல்லை. அவர்களது தொண்டை திறந்த பிணக்குழி, அவர்களது நாக்கு வஞ்சனையே பேசிற்று. அவர்கள் உதட்டில் பாம்பின் நஞ்சுள்ளது. வாயில் சாபமும் கசப்பும் நிரம்பியுள்ளது. இரத்தம் சிந்துவதென்றால் அவர்கள் கால்கள் விரைகின்றன; அவர்கள் கால்கள் படும் இடத்தில் அழிவும் துயருமே உண்டு, அமைதியின் நெறியோ அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் மனதில் கடவுள் அச்சம் என்பதில்லை."

உரோமர் 3 : 9 — 18.

**புறவினத்தார் பாவம்**

பவுல் சகல இனத்தவர்களும் சகல தேசத்தாரும் பாவிகள் என்பதனை பின்வருமாறு விளக்குகின்றார்.

இறைப்பற்று இல்லாத மனிதர்களின் ஒழுக்கக் கேட்டின் மீதெல்லாம் கடவுளின் சினம் விண்ணினின்று வெளிப்படுகிறது. இவர்கள் தங்கள் ஒழுக்கக் கேட்டினால் உண்மையை ஒடுக்கி விடுகின்றனர். கடவுளைப் பற்றி அறியக்கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாய் விளங்கிற்று. அதைக் கடவுளே அவர்களுக்குக் காட்டித் தெளிவுறுத்தினார். ஏனெனில் கட்புலனாகாத அவருடைய பண்புகளும் அவருடைய முடிவில்லா வல்லமையும், கடவுள் தன்மையும் உலகம் உண்டானது முதல் அவருடைய படைப்புக்களிலேயே அறிவுக்குப் புலனாகின்றன. ஆகவே அவர்கள் சாக்குச் சொல்வதற்கு வழியில்லை.

உரோமர் 1 : 18 — 21.

யூத மக்களும் புறவினத்தாரைப் போலவே பாவத்துக்குள் வீழ்ந்துவிட்டனர் என்றும் கூறுகின்றனர்.

**யூதர் பாவம்**

ஆனால் யூதன் என்னும் பெயர் தாங்கியுள்ள நீ திருச்சட்டத்தில் ஊன்றி நிற்கிறாய்; கடவுளைப் பற்றிப் பெருமைப்படுகிறாய். அவருடைய திருவுள்ளத்தை அறிந்திருக்கிறாய்; திருச்சட்டத்தைக் கற்றறிந்தவனாதலால் நன்மையானதைத் தேர்ந்து தெளிகிறாய். அறிவும் உண்மையுமே உருவான திருச்சட்டம் உனக்கு உண்டென்கிற துணிவில் குருடர்களுக்கு வழிகாட்டியாகவும் இருளில் இருப்போருக்கு ஒளியாகவும் அறிவீனர்களுக்கு ஆசானாகவும், குழந்தைகளுக்குப் போதகனாகவும் இருக்க முற்படுகிறாய். இவ்வாறு பிறனுக்குப் போதிக்கும் நீ உனக்கே போதித்துக் கொள்ளவில்லையே.

உரோமர் 2 : 17 — 21.

**மனதார ஏற்றுக்கொள்ளுங்கள்**

நீதிமானாக்கப்படுதலின் வழி விசுவாசமேயாகும். அது முழுக்க முழுக்கக் கர்த்தரின் அருளினால் வருவதாகும்.

விசுவாசத்தின் வழியாய்ச் செயல்படும் பரிகாரச் சாதனமாக அவரைக் கடவுள் இரத்தப் பலியாக்கினார். கடந்த காலத்தில் தம்முடைய திருவருட் செயல் முறையைக் காட்ட விரும்பிய கடவுள் பொறுமையாய் இருந்து, மனிதர் செய்த பாவங்களைத் தண்டிக்காமல் விட்டார். இக்காலத்திலோ அத்திருவருட் செயல் முறையைக் காட்ட விரும்பி, அவர் அருள் மிக்கவராகவும், இயேசுவில் விசுவாசம் கொள்பவன் தமக்கு ஏற்புடையவன் ஆகும்படி அருள் அன்பவராகவும் விளங்குகின்றார்.

உரோமர் 3 : 25, 26.

இந்த அருள் கடவுள் வழங்கும் கொடை என்பது பவுல் கருத்து. இதனை எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவாகக் கூறுகின்றார்.

"அந்த அருளாலேயே விசுவாசத்தின் வழியாக மீட்பு அடைந்திருக்கிறீர்கள். இது உங்களால் ஆனதன்று; கடவுளின் நன்கொடையே."

எபேசியர் 2 : 8.

எனவே விசுவாசம் இயேசுக் கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார் என்று நம்புவதோடு அமைந்துவிடுவதில்லை. அந்தக் கொடையை மனதார, பூரிப்புடன் ஏற்றுக்கொள்வதுதான் விசுவாசம்.

**இரண்டு அம்சங்கள்**

கொடையை மனதார ஏற்றுக்கொள்பவன் நீதிமானாக்கப்படுகின்றான். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படல் இரண்டு அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. (அ) **பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.** ஒரே ஒருவனின் (ஆதாம்) குற்றம் எல்லா மனிதர்க்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்ததுபோல் ஒரே ஒருவருடைய ஏற்புடைச் செயல் எல்லா மனிதர்க்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் மலர்ந்தது."

உரோமர் 5 : 18.


( 3-ம் பக்கம் பார்க்க )

# கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சிமை

[கலாநிதி கனம் ஜேம்ஸ் மேதர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது. தமிழாக்கம்: திருமதி இசபேல் அற்புதநாதன்.]

(முற்றொடர்ச்சி)

(12) இயேசுவின் மாட்சிமை எதினாலே காணப்படுகிறதென்றால் அவர் போதித்தபடியே வாழ்ந்து காட்டினார். அவர் வாழ்ந்தமைக் கேற்பவே அவருடைய போதனைகளும் அமைந்திருந்தன. யோவான் 13 : 15 இல் காண்கிறபடி இயேசு சீடர்களின் கால்களை கழுவிய பின் 'நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்' என்றார். கிறிஸ்துவின் போதனையும் வாழ்க்கையும் ஒன்றாகவேயிருந்தது. I சிலுவை மரணத்தை அவர் ஏற்றுக்கொண்ட விதம் :- II (7) இல் கூறப்பட்டிருக்கிற விளக்கத்திலும் பார்க்க இன்னும் கொஞ்சம் கிறிது கூடச் சொல்லலாம். தம்மைச் சுற்றியுள்ள பகைவர்கள் மத்தியிலும் அவர் சிலுவையிலிருந்து பகர்ந்த ஏழு வார்த்தைகளையும் சிந்தித்துப் பாருங்கள். மத்தேயு 27 : 39 — 44 இல் சொல்லியிருக்கிறபடி 'அந்த வழியால் நடந்து போனவர்கள் தங்கள் தலைகளைத் தூக்கி, 'நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா' என்றும் (வச : 40) 'மற்றவர்களை இரட்சித்தான். தன்னைத் தான் இரட்சித்துக்கொள்ளத் திராணி இல்லை,' என்றும் (வச : 42) 'தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லி தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்.' (வச : 43) என்றும் அவரைத் தூஷித்தார்கள் மாற்கு 15 : 19 — 20 இல் கூறப்பட்டபடி அவர்மேல் துப்பினார்கள். பிரம்பு கோலால் அடித்தார்கள். இப்படியான வேதனையின் மத்தியிலும் சிரசின்மேல அறையப்பட்ட முள்முடியின் உபாதையினாலும் கரங்களில் லேற்றிய ஆணிகளின் வேதனையினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலும் இயேசு சிலுவையிலிருந்து பகர்ந்த ஏழு வார்த்தைகளும் அவருடைய தூய ஆவியையும், மன்னிப்பின் தன்மையையும் மனுக்குலத்தாரை நேசித்த மாட்சிமையையும் கண்ணாடி போல் நிழலாட்டமாய்க் காண்பிக்கின்றனவல்லவா ?

(i) லூக்கா 23 : 34;
(ii) லூக்கா 23 : 42;
(iii) யோவான் 19 : 27;
(iv) மத்தேயு 27 : 46;
(v) யோவான் 19 : 28;
(vi) யோவான் 19 : 30;
(vii) லூக்கா 23 : 46;

சிலுவையில் தொங்கும் ஒரு மனுசன் இந்த வார்த்தைகளைச் சொல்லவும், உண்மையாகவே இவ்வண்ணமாக தன் பகைவர்களுக்காக பரிந்து வேண்டிக் கொள்ளவும் உண்மையாகவே அவர் ஒரு தெய்வ சக்தி நிரம்பியவராக தெய்வீக மனிதனாயிருந்தார். அவர் தன் சீஷர்களுக்கு முன்பு கூறின பிரகாரம் சிலுவை மரணமும் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுதலும் உண்மையாகவே நடந்தேறின. இதிலிருந்து தெய்வீகத் தொல் பொருளாளர் போட்ட தெய்வீகத் திட்டம் எவ்வண்ணமாகக் கடைசி வரைக்கும் திருப்தியாக பரிபூரணமாக நிறைவேறிற்று என்று நாமறிவோம்.

இயேசுக் கிறிஸ்துநாதரின் முதலாம் வருட சுவிசேஷ வேலைக் காலத்தில் அவர் மலையின் மேல் ஏறி மறுரூபமாக்கப்பட்டார் என்றும் அவர் சீசருடன் கூட மலையிலிருந்திறங்கி வரும்போது அவர் அவர்களை நோக்கி 'மனுச குமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்' என்று கட்டளையிட்டார் என்று மாற்கு 9 : 9 இல் வாசிக்கிறோம். இத்துடன்கூட மத்தேயு 16 : 21; யோவான் 11 : 25 முதலிய வசனங்களைப் பாருங்கள். நான் முன்பு ஒருமுறை எனது சொற்பொழிவுகளில் குறிப்பிட்ட பிரகாரம் இயேசுக் கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதல் ஏழு வழிகளில் ஒரு மாபெரும் வெற்றியாகும்,

ஓ கிறிஸ்துவே! நீர் எப்பொழுதும் எவ்வளவு பெரிய உந்நதமானவராய் திகழ்கிறீர் பிதாவே! ஒரு தாயைப்போல அன்பு நிறைந்தவராகவும். இரக்கமுடையவராகவும், மன்னிக்கிறதற்குத் தயை பொருந்தியவராயுமிருக்கிறீர். துன்ப வேளையில், கோரப் புயல்கள் வீசிப் பயந்த தனித்த வேளைகளில் ஓர் அன்பான நண்பராயிருக்கிறீர். வாழ்விலும் தாழ்விலும், துன்பத்திலும் இன்பத்திலும், வறுமையிலும் ஐசுவரியத்திலும் இணைபிரியாத அன்பான வாழ்க்கைத் துணைவனுமாயிருக்கிறீர். உண்மையாகவே கிறிஸ்து இராசாவே! நீர் எங்கள் உத்தம நேசர்.

புலவர் ஸ்கிறிவின் (Poet Scriven அவர்களுடன் சேர்ந்து பாடுவோம்.

'பாவ சஞ்சலத்தை நீக்கப்
பிராண சிநேகிதனுண்டே,
பாவப் பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே;
லோக துக்க துன்பத்தாலே,
நெஞ்சம் நொந்து
சோருங்கள்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.'

சார்ள்ஸ் உவெஸ்லி (Charles Wesley) எழுதிய பிரகாரம் 'இயேசு சிறையிருப்பை நீக்கினார், சாத்தானின் தலையை நசுக்கினார். பெலனற்ற ஆன்மாவை உயிர்ப்பித்து திடசங்கற்பம் நல்குவார்.'

ஜெபிப்போமாக! 'கிறிஸ்துவே நீர் மகிமையின் இராசா உம்மையே நேசித்துச் சேவிக்க சங்கற்பம் பூணுகிறோம்; உம்முடைய உதவியையும் ஒத்தாசையையும் எங்களுக் கீந்தருளும். உமது நுகத்தைச் சுமந்து உம்மையே பின்பற்ற பெலன் தாரும் இயேசுவே!

(முற்றும்)

---

## அருள் பற்றி பவுல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### (ஆ) நீதிமானாக்கப்படுகின்றான். இறைவனுக்கு ஏற்புடைத்தாக்கும் நிலை வழங்கப்படுகின்றது.

நம் ஆண்டவராகிய இயேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தவர் மீது விசுவாசம் வைத்திருக்கும் நாமும் அவ்வாறு ஏற்புடையவரென மதிக்கப்படுவோம்.

உரோமர் 4 : 24.

விசுவாசத்திற்குள் வந்துவிட்டவனுக்கு நீதி புகுத்தப்படுகின்றதென்பது அர்த்தமாகாது. "அவ் விசுவாசத்தை முன்னிட்டு, இறைவன் அவனை ஏற்புடையவன் என மதிக்கிறார்" என்கிறார் பவுல். ஆகவே அவன் நீதியையன்றி விசுவாசமே சீர்தூக்கப்படுகின்றது.

நீதிமானாக்கப்படுதலின் விளைவு செயல்கள்

நல்ல செயல்கள், கிரியைகள், நீதிமானாக்கப்பட்டவனிடத்திலிருந்து வருகின்றன. நல்ல கிரியைகள் ஒருவனை நல்லவனுக்குவதேயில்லை. நல்ல கிரியைகள் நல்லவனிடத்தில் இருந்து வருகின்றன. தீய செயல்கள் ஒருவனைத் தீயவனுக்குவதில்லை. தீயாரிடமிருந்து தீய செயல்கள் வருகின்றன. கெட்ட மரம் நல்ல கனியைத் தருவதில்லை நல்ல மரம் கெட்ட கனியைக் கொடுப்பதில்லை.

அருட் கொடையை மனதார ஏற்றுக்கொண்டவன் நல்ல கனிகளைக் கொண்டு விளங்குவான் என்பது பவுல் கருத்து.

"ஏனெனில் உடலோடு இருந்தபோது அவனவன் செய்த நன்மை தீமைக்குத் தக்க பலனடையும்படி கிறிஸ்துவின் நீதியிருக்கை முன் நாம் அனைவரும் செய்த தெல்லாம் வெளிப்பட வேண்டும்,"

2 கொரி. 5 : 10.

அவரோ ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயல்களுக்கேற்பக் கைம்மாறு தருவார். நற்செயல் செய்வதில் உறுதி தளராமல் மகிமையும் மாண்பும் அழியாமையும் தேடுவோருக்கு முடிவில்லாத வாழ்வை வழங்குவார்.

உரோமர் 2 : 6.

எனவே விசுவாசம் அளிக்கும் சுதந்திரம் பாவஞ் செய்ய வழங்கப்படும் சுதந்திரமன்று; பாவஞ் செய்யாமல் இருப்பதற்கு அருளப்படும் சுதந்திரமாகும். பவுல் விசுவாசத்தை வலியுறுத்தினாரேயொழிய அறத்தை வலியுறுத்தவில்லை என்று கருதப்பட்டது அதனை அவர் உணர்ந்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

ஆகவே என்ன சொல்லுவோம? சட்டத்தின் அதிகாரத்தில் இல்லாமல், இறையருளின் அதிகாரத்தில் இருப்பதால் நாம் பாவம் செய்யலாம் என்போமா? ஒருக்காலும் இல்லை. எவனுக்குக் கீழ்ப்படிந்து அடிமைகளாக உங்களைக் கையளிக்கிறீர்களோ, அவனுக்கு நீங்கள் அடிமை என்பது உங்களுக்குத் தெரியாதா? சாவுக்கு உட்படுத்தும் பாவத்திற்குக் கீழ்ப்படிந்தால் நீங்கள் பாவத்துக்கு அடிமைகள். இறைவனுக்கு ஏற்புடையவராக்கும் கீழ்ப்படிதலுக்கு உட்பட்டால் நீங்கள் அதற்கு அடிமைகள்.

உரோமர் 6 : 15.

அப்படியானால் என்ன சொல்லுவோம்? அருள் பெருகும்படி பாவத்தில் நிலைத்திருப்போம் என்போமா? ஒருக்காலும் இல்லை. பாவத்திற்கு இறந்துவிட்ட நாம் எவ்வாறு இன்னும் அதிலேயே வாழ்ந்துகொண்டிருக்க முடியும்.

உரோமர் 6 : 2.

(அ) எல்லோரும் பாவிகள்; (ஆ) அருள் இறைவனது கொடை. (இ) விசுவாசத்தால் அதனை ஏற்றுக்கொள்பவனுக்கு மன்னிப்பு உண்டு; (ஈ) மன்னிப்பினால் ஏற்புடையவனாகின்றான். (உ) ஏற்புடையவன் இறைவனுக்கு அடிமை, (ஊ) இறைவனுக்கு அடிமையானவன் நல்ல கனியைத் தருகிறான். இதுவே சின்னப்பர் அருளைப் பற்றிக் கூறும் கருத்தாகும்.

---

## பல்கலைக்கழக அனுமதி

1982 முதல் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு உயர் கல்வி அமைச்சால் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டா. அதற்குப் பதிலாக மாணவர்கள் தமது சுய விண்ணப்பப் பத்திரத்தில் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வருடம் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிபெறும் விஞ்ஞான மாணவர்களுக்கு அனுமதி தொடர்பான இரண்டாவது விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும் இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி பல்கலைக்கழக கல்வி ஆண்டு விரிவுரைகள் ஆரம்பமான பின்பே மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படும்.

வர்த்தகம், கலைப்பீட மாணவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி இரண்டாவது விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும்.

மாபொல சுவீப் மூலம் வசூலிக்கப்பட்ட நிதியைக்கொண்டு இவ்வருடம் 400 புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சைகளில் அகில இலங்கை ரீதியில் கூடுதல் புள்ளி பெற்றவர்களுக்கு முதல் 40 புலமைப் பரிசில்களும வழங்கப்படும். ஏனைய 360 புலமைப் பரிசில்களும் திறமையையும் தேவையையும் அனுசரித்து வழங்கப்படும்.

புலமைப் பரிசில்களுக்கென இரண்டாவது விண்ணப்பத்துடன் புலமைப்பரிசில் விண்ணப்பமும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அடுத்த வருடம் முதல் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப்பத்திரம் அனுப்பி வைக்கப்படமாட்டாது, பதிலாக பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இவ்வருடம் பல்கலைக்கழக தெரிவு ஆணைத்தும் முடிவடைந்த பின் தனிதபர்கமிட்டி ஒன்று அமைக்கப்படும்.

இவ்வருட பல்கலைக்கழக அனுமதியில் தனக்கு அநீதி நடந்திருப்பின் மாணவர்கள் அப்பீல் செய்யலாம். ஆனால் 50 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும்.

அப்பீல் தொடர்பாக தனியான வெளியார் ஒருவர் நியமிக்கப்படுவார். உண்மையில் சம்பந்தப்பட்ட மாணவனுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் கட்டண பணம் திருப்பி செலுத்தப்படுவதுடன் அம்மாணவருக்கு நீதி வழங்கப்படும்.

## நெடுந்தீவில் இராணுவம்

எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறாத நெடுந்தீவிலிருந்து ராணுவ வீரரை உடனடியாக திருப்பி அழைக்குமாறு கோரி ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ராணுவ அதிகாரி ஆகியோருக்கு தந்தி அனுப்பி வைத்துள்ளார்.

பெருங்கடலால் பிரிக்கப்பட்ட நெடுந்தீவுக்கு இராணுவம் அனுப்பப்பட்டதால் தீவுப்பகுதி மக்கள் அமைதி இழந்து அச்சத்துடன் வாழ்வதாகவும் ஊர்காவற்றுறை எம். பி. அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார்,

*EDITORIAL*

## A People Adrift

It is estimated that there are currently sixteen million refugees adrift in the stormy seas of world politics, the saga of Indo-China's "boat people" being the most dramatic.

Less dramatic though, the saga of our Tamil youth 'adrift' in West Berlin has captured our national headlines for days on end, during the last fortnight.

The picture projected is of a group of Tamil youth who have sought, under false pretexts, "political asylum" in West Berlin, with a view to making a fast buck in a developed country, at the expense of blurring the image of their own country.

The fact of the matter is that since 1979, a total of *3960* Sri Lankans (CDN 15-7-81) have attempted to enter the GDR.

But the July 1981 exodus of Tamil youth seems to have raised more eyebrows than any other exodus, because perhaps of its close proximity in time, to the June 1981 "incidents in Jaffna".

Whether the exodus is due to a 'pull factor' in developed countries or 'a push factor' in the home country is, for our purposes, immaterial.

No one, we believe, can be happy over such large numbers of our Tamil youth, leaving their homes is search of pastures green, and living in a foreign country enduring the bitter experience of sudden uprootedness.

But, on the other side of the "ledger", is the present unedifying situation particularly in the Northern part of the country.

"Disappearances" of Tamil youth have been a nightmarish experience with the Jaffna parent. The problem has assumed new dimensions recently when, according to a news report in *Thinapathy* (4-8-81) both the Army Commander and the Inspector General of Police have made a statement at the Appeal Court Colombo that a certain Tamil youth (earlier reported officially to be in custody) has not been arrested by the army or the police.

In this dismal backdrop, many a Jaffna parent seems to be of the view that even if the cards are heavily stacked against his son to obtain gainful employment abroad it is good for him to be at least "safe" from a political climate which is painfully redolent of a voilent confrontation at any time.

We sometimes wonder if the furore over *Eelam* is not currently being overdone. *Eelam* has inflamed controversy in the country far beyond the realm of reality, making Tamil people needlessly traumatised by violence and disruption.

Some of these unfortunate people adrift have, we note, endured also the stigma that they have fled not from injustice but from justice pursuing them at their heels.

Preventive action, specific to this problem lies not so much in organising a wide net work of propaganda on the reasons for the exodus, as in recognising human rights and concentrating on long term prospects to reduce conflicts which have a high potential for generating political "refugees".

We have read with considerable interest the comments of Minister Ronnie de Mel and of the Prime Minister himself, made on public platforms on the need for "*peace* and *hamony*" in the country as a pre-requisite for national health.

But the irrevocable fact remains that these two precious ingredients of national well being, will be hard to come by, if one segment of the population of the country is constantly "adrift" for one reason or the other.

It needs little emphasis, in the present context of Sri Lankan annals, that national sovereignty has to be based on the articulation of certain unmistakable norms, if it is to be meaningful to the whole community.

The most important of this norm, underscored in recent times by Prof. A. J. Wilson in his Chelvanayakam memorial addresses delivered in Sri Lanka is that the Tamils have an *identity* of their own and *not* a group which could be thought of as being "assimilable" or "unassimilable"

There cannot be a more compelling argument to give the "Devolution Scheme", *a fair trial* in Sri Lanka, than the plight of the Tamil 'refugees' living eclectically, adventurously and at times precariously in West Berlin.

---

### Uduvil Girls' College

Miss C. V. Selliah has been appointed by the Executive Committee of the Jaffna Diocese of the CSI as the Principal of Uduvil Girls' College with effect from 1-1-82.

Miss Selliah graduated from the London University in 1960, and proceeded to the States in 1965 to do her Masters Degree.

In 1975, she gained admission to the University of Oxford for a year's study in its Department of Educational Studies.

She has been associated with the Uduvil Girls' College as a member of the staff and as Vice-Principal for over 15 years.

She is the daughter of Mr. K. A. Selliah, Principal Emeritus of Jaffna College.

---

### The Jaffna College Miscellany

(Centenary Publication)

The Centenary Publication of the Jaffna College Miscellany is a stupendous undertaking: For this reason, it is bound to have its own flaws, mostly of omissions.

Gaps do occur. Certain periods in the evolution of the *Miscellany* have been given more prominence than perhaps others. A larger representation of Alumni in the section on *What they Remember* would have been welcome. Possibly the response from the Alumni to letters of the Editor was not encouraging.

Some significant extracts (from past Editorials, Articles or Principal's Reports), that have a message for our time, published in capsule form might have added considerable lustre to the publication.

But there is little doubt that what we have in the publication reflects in true measure the spirit of the institution. As an alumnus ourselves for twelve long years we feel proud that the contribution Jaffna College has made towards human dignity and human rights glows in the Centenary Publication in several of the articles published.

Freeing a student from all the shackles that bind him to any kind of enforced hypocrisy, was a conspiracy in our day at Jaffna College.

We are happy that this aspect of the Jaffna College tradition has been honestly portrayed in the Centenary Publication of the Miscellany.

We only know too well the difficulties today of getting out an English publication of this magnitude through the press. It is only those who have, like Napoleon and Edison, polyphasic sleep patterns that can undertake his task.

We congratulate Jaffna College on the human capital it has, to shoulder such responsibilities.

*— Editor.*

---

### Job Applicants for Nigeria

Local professionals who seek jobs in the oil-rich African State of Nigeria are mostly accountants, doctors, teachers and engineers — The State pays princely sterling salaries for qualified people.

But of late, Sri Lankan Diplomatic Missions abroad have been, we learn, reluctant to issue visas to Sri Lanka for Nigerian government officials.

The Chairman of the Public Service Commission in Nigeria could not, we learn, come to Colombo to interview applicants.

It is however reported that the Labour Minister has made a strong case to permit Nigerian officials to come to Sri Lanka.

What has happened in recent times appears to be that Nigerian officials who could not get a visa from India to Sri Lanka had been interviewing and selecting candidates in India.

Some 7000 Sri Lankans mostly graduate teachers are working currently in Nigeria sending seizable sums of foreign exchange to Sri Lanka.

---

## Anticipatory and Confirmatory Baptism

(FOR COMMENTS AND SUGGESTIONS)

*by* **Dr. Lynn de Silva**

*(Continued from last issue)*

Baptism of infants, as well as baptism of adults can be anticipatory.

(a) John's baptism was anticipatory. John acknowledged this. He said, "I baptize you with water, but he will baptize you with the Holy Spirit", (Mk. 1; 8; Lk. 3:16). Water baptism had to be confirmed by spirit baptism.

(b) In the case of Apollos water baptism was confirmed by instruction (Acts 18: 24-28). He knew only John's baptism. He had a thorough knowledge of the scriptures, was instructed in the way of the Lord and taught correctly the facts about Jesus (V: 25). But there was a gap that needed to be filled. So Aquila and Priscilla took him home and "explained to him more correctly the Way of God" (V. 26) Anticipatory baptism was confirmed by instruction.

(c) Even reception of the Spirit is in a sense anticipatory. In the narratives of Cornelius in Acts 10: 44-48 and 11: 15-18, the Gentiles who had already received the spirit were baptized. By this act their faith was confirmed and they were initiated into the Christian church.

(d) Even the baptism of Jesus, at which the Spirit descended upon him, was in a sense anticipatory. Jesus said, "I have a beptism to be baptized with and now I am constrained until it is accomplished" (Lk- 12: 50 of. Mk. 10: 38-39). The mission which began with his baptism in Jordan had to be completed by his blood baptism on calvary. according to 1 Jhn. 5: 6-8, water baptism and blood baptism are complementary. The baptism in Jordan anticipates the baptism on Calvary and is confirmed by it.

From this discussion it is seen that Baptism is the central act of initiation. It can be sufficient in itself and may not require a confirmatory act as in the case of Apollos; it may be anticipatory and require a confirmatory act; or it may itself be a confirmatory act along with the reception of the Spirit.

---

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 7th August, 1981.